**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.05.2020

Accepted: 11.06.2020

Published: 01.07.2020

Citation:
Kaliyanikumar, M., & Chellappa, A. (2020). Socio Economic life in Vathiriyar Community. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 145–156.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3412

*Corresponding Author:
kalan0825@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Socio Economic life in Vathiriyar Community

**Dr. M. Kaliyanikumar**
*Post Doctoral Fellow (Folklore), V.P.S. Tamil Research Centre*
*The M.D.T. Hindu College, Tirunelveli, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-6229-6076

**Dr. A. Chellappa**
*Reader in Tamil, V.P.S. Tamil Research Centre*
*The M.D.T. Hindu College, Pettai, Tirunelveli, Tamil Nadu, India*

**Abstract -** Folk handicrafts are also created for the purpose of utilization. The techniques for these are traditionally and often caste-based. Artisans engaged in the industry use minimal tools to produce handicrafts using locally available raw materials.

**Key Words:** Folk lore, Tamil Ethnography, Folk handicrafts, Artisans, Raw Materials, Industry.

**References**

1. Val Vadiriyar, J.P., 1990. Vadiriyar Samooga Varalaru, Palaka, Vahakangal, Vadiriyar Mahajana Sangam, Chennai.
2. Jeyakumar, T., 1999. Noolum Vazhvum, Vathiriyar Samooga Vazhviyal – Oor Aivu– Neithal Veliyeedu, Chennai.
3. Kurusami Siddhar, Gnanasekaran, T., 1996. Tamilar Panpattu Varalaru,Tamilar Panpattu Samooga Aivu Maiyam, Coimbatore.
4. Kurusami Siddhar, Gnanaseran, T. 1999. Tamilar Panpattu Varalaru (Thogupu – II), Tamilar Panpattu Samooga Aivu Maiyam, Coimbatore.
5. Datsinamoorthy, S., 1994. Tamilar Nagareegamum Panpadum, Yaal Veliyidu,Chennai
6. Rama. Sundaram, Krishnamoorthy, R., 1998. Kalanthorum Ariviyal Tholilnutpam, All India Science Tamil Institute, Thanjavur.
7. Shanmugasundaram, S., 2006. Tannanane Nellai Nattupuraviyal, Kaviya, Bangalore.
8. Vanamalai, N., 1995. Navin Araichi, Makkal Achagam, Chennai.
9. Siyamala Sarandaye, 1996. India Samuthayam, National Book Trust, India.
10. Kadir Murugu, 2007. Murkoodar Pallu, Moolamum Vuraiyum, Sarah Pathipagam, Chennai .
11. Subramaniam, P., 1996. Social History of the Tamils (1707 – 1947), Dr. Print World (P), New Delhi, 110 015.
12. Das, A.K., 1979. Tribal Art and Craft Agam Kala Prakasham – Delhi.
13. Richard – Andrasan 1979 Art in Primitiue Societics Pkentile Hall – Ine, Engle – World Cliffts.
14. Surnila Sani, 1997. Terracotta Art of Rajasthan, Aryam Books International, New Delhi

# வாதிரியார் இனத்தின் சமூகப் பொருளாதார வாழ்க்கை முறை

*முனைவர் மு. கலியாணி குமார்*
முது முனைவர், V.P.S தமிழ் ஆய்வு மையம்
ம.தி.தா. இந்துக் கல்லூரி, பேட்டை, திருநெல்வேலி

*முனைவர் ஏ. செல்லப்பா*
தமிழியல் வாசகர், V.P.S தமிழ் ஆய்வு மையம்
ம.தி.தா. இந்துக் கல்லூரி, பேட்டை, திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்:*** *நாட்டார் கைவினைப் பொருட்கள்யாவும் உபயோகப்பயன்பாட்டு நோக்கில் படைக்கப்படுவன. இவைகளுக்கான தொழில்நுட்பங்கள் யாவும் மரபுரீதியாகவும் பெரும்பாலும் சாதிய வழிமுறையிலும் எடுத்துச்சொல்லப்படுகின்றன. கைத்தொழிலில் ஈடுபடும் கலைஞர்கள் குறைந்தபட்சக் கருவிகளைப் பயன்படுத்தி இடம் சார்ந்து கிடைக்கின்ற கச்சாப் பொருட்களைக்கொண்டு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டார் வழக்காற்றியல், இனவரையியல் ஆய்வு, நாட்டுப்புற கைவினைப் பொருட்கள், கைவினைஞர்கள், மூலப்பொருட்கள், தொழில்*

## முகம்

சங்ககாலத் தமிழர்கள் அவரவரின் தகுதிக்கு ஏற்ப உடையணிந்தனர். ஆடவர் இடையில் ஒர் ஆடையும் மேலே ஒரு துண்டும் அணிந்தனர் போலும்!

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே"**

அக்காலத்து ஆடைகளின் நேர்த்தியும், அழகும் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. கண்ணுக்குப் புலப்படாத மெல்லிய இழைகளால் ஆடை நெய்யப்பட்டது. ஆழகிய பூத்தொழில் செய்யப்பட்டிருந்தது. பாம்பின் சட்டையப் போல அவ்வளவு மென்மையாக ஆடை விளங்கிற்று.

**புகை விரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ**
**ஆவி யன்ன அவரிர் நூற்கலிங்கம்**
**பெரும்பாண் (49)**

இந்திர கோபப் பூச்சியைப் போன்ற செந்நிறம்கொண்ட பூவாடையைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

அடியார்க்கு நல்லாரின் உரையில் பல ஆடை வகைகள் சுட்டப்படுகின்றன. அவை: கோசிகம், பீதகம், பச்சிலை அரத்தம், நூண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபடம், சித்திரக்கம்மி, குருதி, கரியல் பேடகம், புரியட்டம், காசு, வேதங்கம், புங்கார்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், நந்தியம், வண்டைகவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், கிறைஞ்சி, செம்பொத்தி, பனிப்பொத்தி என்னும் முப்பத்தாறாகும்.

சங்ககாலத்தில் உடுக்கை, ஆடை, கலிங்கம், காழகம், அறுவை, மடிதுகில் கறை முதலிய

பல பெயர்களால் ஆடை குறிக்கப்பட்டது. பாலாடை போன்றும், பாம்பின் சட்டை போன்றும் மெல்லிய ஆடையும், கொட்டைக் கரையிட்ட பட்டாடையும், மக்களின் கைத்திறனுக்கும், கலைநுணுக்கத்துக்கும் கடுமையான உழைப்புக்கும் சான்றாக அமைந்தன. அக்கால மக்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட வண்ணங்களை அறிந்திருந்தார்கள். ஆடைகளுக்கு இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்தி வண்ணமூட்டினர்.

### பருத்தியும் – நெசவும்

தென் தமிழ்நாட்டில் பருத்தி மிகுதியாக விளைந்தது. பருத்தியிலிருந்து நூல் நூற்றலைக் கொட்டை நூற்றல் என்பர். பெண்களே நூற்புத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டனர் எனவே அவர்கள்! "பருத்தி பெண்டிர்" எனப்பட்டனர்.

**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டும் நுண் விணைக்காருகர் இருக்கை**

என்பதால் நெசவாளர்கள் தனித் தெருவில் வாழ்ந்தனர் என அறிகிறோம். நெசவுத் தொழிலில் பண்பட்ட பழம் பேரினங்களில் தமிழினம் தலையாயது. கி.பி. 300ல் இயற்றப்பட்ட திருக்குறள் கௌடியரின் அர்த்த சாஸ்த்திரத்துடனும், மனுவின் வாழ்க்கை நெறித் தொகுப்புடனும் ஒப்பிடுவதற்குரியது. திருவள்ளுவர் தாழ்ந்த குலத்தில் பிறந்து நெசவுத் தொழில் செய்தார் என்ற குறிப்புகளும் கிடைக்கின்றது. உடை பெயர்த்தெடுத்தல் (தொல்காப்பியம் - மெல் 14) (2) பருத்தி நெசவு முதன்முதலில் தமிழகத்தில்தான் நெய்யப்பட்டதென்றும், அங்கிருந்தே மேலை நாடுகளும் பரவின தென்றும் வயவர் கான் மார்சல் கூறுவதாகத் தேவயேப்பாவாணர் மேற்கோளிடுகிறார்.

உலகில் உழவினிற்கடுத்து, தொன்மைத் தொழிலான நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கும் தேவந்திரகுல வேளாளர் இனத்தின் உட்பிரிவான வாதிரியார் இன மக்களின் சமூகப் பொருளாதார நிலையை வெளிப்படுத்தும்வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஆய்வின் மூலம் வாதிரியார் இன மக்களின்அடையாளங்கள், தொழில்நுட்பங்கள், வாழ்வியல், சமூகப் பொருளாதார நிலைகள் அதன் காரணிகளை ஆராய்வது இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

### களப்பணி சென்ற இடங்கள்

| | |
|---|---|
| 1. | பொத்தரங்கன்விளை |
| 2. | தெற்கு பரமன்குறிச்சி |
| 3. | முருகேசபுரம் |
| 4. | செந்தியம்பலம் (சாயர்புரம்) |
| 5. | சில்வர்புரம் |
| 6. | பாலையாபுரம் |
| 7. | சுப்பிரமணியாபுரம் |
| 8. | அண்ணாநகர் |
| 9. | முத்தையாபுரம் |
| 10. | வேப்பலோடை |
| 11. | சூரங்குடி |
| 12. | அரசடி |
| 13. | பனையூர் |
| 14. | வள்ளியம்மாள்புரம் |
| 15. | நம்பியூத்து |
| 16. | அழகப்பபுரம் |
| 17. | மகிழ்ச்சிபுரம் |
| 18. | மடப்புரம் |
| 19. | அருளானந்தபுரம் |
| 20. | ஒட்டக்காரன் குடியிருப்பு |
| 21. | ஐம்பது வீடு |
| 22. | பொன்னிவாய்க்கால் |
| 23. | இராமலிங்கபுரம் |
| 24. | செவல்பட்டி |

### வாதிரியார் நெசவுத் தொழில் வரலாறு

### வாதிரியார் வரலாறு

தென் தமிழ்நாட்டில் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, இராமநாதபுரம்

மாவட்டங்களில் மட்டும் வாழும் சமூகத்தினர் வாதிரியார் சமூகத்தினர். வாதிரியார் சமூகம் குலத்தொழிலாக நெசவுத் தொழிலை செய்து வருகின்றனர். இவர்களின் பூர்வீக இருப்பிடம் தஞ்சைமாவட்டத்தின்அருகிலுள்ளதிருவாரூர். அங்கிருந்து தென் மாவட்டமான தாமிரபரணி பாயும் நதி கரையோரம் குடி பெயர்ந்தனர்.

வாதிரியார் சமூகத்தினர் தங்கள் குல தலைவனுடன் வடநாடு சென்று வழிபட்டு வந்தனர். பின் அகத்தியர் வாழும் தென்மலை பகுதிக்கு வந்தனர். தென்பகுதிக்கு வந்த வாதிரியார் சமூகத்தினர், வள்ளியூர் பகுதியில் தன் இனத்தலைவர் குலசேகர பாண்டிய பெருமாள் தலைமையில் கோட்டை கட்டி வாழ்ந்தனர். வாதிரியார் சமூகத்தினர் வள்ளியூரிலிருந்து நெசவுத் துணிகளை வெளி மாநிலத்திற்கு எடுத்து சென்றனர். தன் மக்களுடன் குலசேகரபாண்டிய பெருமாளும், கர்நாடக பகுதிக்குச் சென்றார். அப்பொழுது கர்நாடக மன்னன் மகள் குலசேகர பாண்டிய பெருமாள் மீது ஆசைபட்டதன் காரணமாக கர்நாடக மன்னன் குலசேகர பாண்டிய பெருமாளுக்குத் தூது அனுப்பினார். குலசேகர பாண்டிய பெருமாள் கர்நாடக மன்னன் மகளைத்திருமணம் செய்ய மறுத்து விட்டார். இதனால் கோபம்கொண்ட கர்நாடக மன்னன், குலசேகர பாண்டிய பெருமாள் வாழும் வள்ளியூருக்குப் படையெடுத்தான்.

படையெடுப்பின் காரணமாக வள்ளியூர் கோட்டை முழுவதும் இடிக்கப்பட்டது. குலசேகரபாண்டிய பெருமாளும், அவன் மக்களும்பல்வேறுதிசைகளுக்குச்சென்றனர். பள்ளிபத்து, படுக்கைபத்து, செட்டிபத்து, தண்டப்பத்து, சிடேயாபத்து, சிட்டைப்பேரி, சேரகுளம் பகுதியில் குடியேறி நெசவுத் தொழில் செய்தனர். அப்பகுதியிலிருந்து வாதிரியார் சமூகம் பல்வேறு காரணங்களாலும், அயல் நாட்டவர், வேற்று இனத்தவர்களின் படையெடுப்பில் பல பகுதிகளில் குடி அமர்ந்தனர்.

## கிளை வழிமுறைகள்

வாதிரியார் சமூகத்தில் ஏழு கிளை பிரிவாக உறவு வைத்துள்ளனர்.

| | |
|---|---|
| பட்டன் | பட்டத்துக்குறியவன் |
| சைவன் | சைவ சமயத்தவன் |
| நம்காளி | காளி தெய்வத்தை வணங்கியவன் |
| அருமைப் பணிந்தான் | அருகம் புல்லைப் பணிந்தவன் |
| ஆவடைப் பணிந்தான் | ஆவடை என்ற பெண்ணை பணிந்தவன் |
| அருமைக் கொடி | சொற்ப ஜனமுடையவன் |
| கன்னிகை குறையான் | கன்னி தெய்வத்தை வணங்கியவன் |

## திருமண உறவுமுறைகள்

1. பட்டனும், சைவனும் சகோதரர்கள் இவர்கள் மற்ற ஐந்து கிளைகளோடும் திருமண உறவு வைத்துக்கொள்வர்.
2. அருமைப் பணிந்தாள், ஆவடைப் பணிந்தாள், சகோதரர்கள். மற்ற கிளைகளோடு திருமண உறவு வைத்துக் கொள்வர்.
3. கன்னிகை குறையாள், ஆறு கிளைகளில் திருமண உறவு வைத்துக்கொள்வர்.

## வாதிரியார் சமூக உட்பிரிவுகள்

| | |
|---|---|
| பட்டன் | பணிந்த பெருமாள்<br>அக்காலை<br>பூ மாலை<br>அவையொத்தி<br>கிருட்டினவாதி |
| சைவன் | திமிர்ந்தான்<br>பரியேறி<br>துலாலேறி<br>சே நாட்டான் |

| | |
|---|---|
| நம் காளி | காரியாண்டி<br>கருத்தக்குட்டி<br>மெய்யுள்ளான்<br>கோமாளி<br>வெள்ள வெட்டான்<br>மார்த்தாண்டான்<br>செந்திக் குறையான்<br>பெருமாள் வாதிரியான் |
| அருமைப் பணிந்தான் | சிலுக்க வட்டி<br>நாராயண வாதிரியான்<br>ஆதிச்ச வாதிரியான்<br>பரதேசி வாதிரியான் |
| ஆவுடைப் பணிந்தான் | நல்லாப் பணிந்தான் |
| அருமைக்கொடி | புரிவு |
| கன்னிகை குறையான் | நட்டாளி |

### பட்டய செய்தி

வாதிரியார் சமூகத்தின் வரலாறுகள் சில வகை மட்டும் பட்டயச் செய்தியாக உள்ளன. 17ஆம் நூற்றாண்டிலுள்ள செய்தி:

காலி வாகன சகாப்த வருஷம் 1540 கொல்லம் நின்ற கொல்லம் ஆண்டு 793 காயுகத்தி வருஷ (ஆங்கிலம் 11.2.1619) பூர்வ பகஷத்து தசமி திதியும் தை மாதம் 28-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அமுதருள வளநாட்டில் சிட்டனப்பேரியில் (ஸ்ரீ. கிருஷ்ணபேரி) வசிக்கும் தெய்வச் செட்டியார் அவர்கள் புத்திரர் அழகு செட்டியார் எழுதியது.

**ஆதி வீர வாதிரியான மகன் ஆதிச்ச வாதிரியான்
வன்னியன் வாதிரியான் மகன் ஆதிச்ச வாதிரியான்
அய்யப்ப வாதிரியான் மகன் ஆதி வீர வாதிரியான்
கிரய சாதனப் பட்டியத்தின்படி வாதிரியார்**

1600ஆம் வருஷத்துக்கு முன்பே கிருஷ்ணப் பேரியில் வாழ்ந்தனர்.

### செட்டியாபத்து செய்தி

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி அருகிலிருக்கும் தேரி பகுதியான செட்டியபத்து பகுதியில் 16ஆம் நூற்றாண்டில் ஆத்திமுத்து வாதிரியான் என்பவர் தன் சமூகத்துடன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு குழந்தை இல்லையே என்ற ஏக்கத்துடன் இருக்கும் நிலையில், தேரிக் காட்டுப் பகுதியில் இரண்டு குழந்தைகள் கிடப்பதைக் கண்டு குழந்தையை எடுத்து வந்தனர். இரண்டு குழந்தைகளுக்கும் வயணப்பெருமாள், மாலையம்மாள் என்று பெயர் வைத்து நல்லமுறையில் வாழ்ந்தனர்.

ஆத்திமுத்து தெய்வ பக்தியுடையவன். இவன் வாரம் ஒருமுறை உடன்குடி சென்று துணி நெய்வதற்காக நூல் வாங்கி வரும் வேலையில் இவனுக்குச் சலவைத் தொழிலாளியின் நட்பு கிடைத்தது. அவர்கள் வீட்டில் தங்கி வருவான். சலவைத் தொழிலாளி மனைவிக்கு குழந்தை பாக்கியம் இல்லாமல் வருத்தம் அடைந்தாள். அப்பொழுது ஆத்திமுத்து உனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்றான். அதன்படி அவருக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்தது. அப்பகுதியில் காட்டு பன்றியின் அட்டகாசம் அதிகமாக இருந்தது. இந்தப் பன்றிகளை கட்டுப்படுத்த மலையாள மந்திரவாதி வந்தான். அவன், அந்தப் பகுதி மக்களிடம் இந்த பன்றியைக் கொன்று அதனை எல்லோரும் சாப்பிடும்போது, உங்கள் குறை தீரும் என்றான். அதன்படி மக்கள் காட்டுப் பன்றியை அடித்துச் சாப்பிட்டனர். அதன்படி ஆத்திமுத்துவைத் தெய்வமாக வழிபட்டனர். அன்றுமுதல் இன்றுவரை ஆத்திமுத்துவின் குடும்பம் இருந்த இடத்தைப் புனிதமாக வழிப்படுகிறனர்.

இப்பகுதியில் யாழ்பாணம், மலையாள பகுதியிலிருந்து வந்த மக்கள் ஆத்திமுத்துவின் இனத்தவரை அடித்து விரட்டினர். அதன்பின் கழுகுமலை நாயக்கர்கள் இப்பகுதியில் அதிகாரம் செய்தனர். பின் அவர்கள் சென்றவுடன் நாடார் இனத்தவர்களே இப்பகுதியிலுள்ள அனைத்து நிலங்களையும் தம் வசப்படுத்தி செட்டியாபத்து ஊரையும் தம் வசம் வைத்துக்கொண்டனர்.

**வாதிரியார் வாழும் இடங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்டம் | சாஸ்தான் கோயில் கோயில்விளை |
| 2 | திருநெல்வேலி மாவட்டம் | பொன்னி வாய்க்கால்<br>இராமலிங்கபுரம்<br>வள்ளியம்மைபுரம்<br>நம்பியூத்து<br>அழகப்பபப்புரம்<br>மகிழ்ச்சிபுரம்<br>மடப்புரம்<br>அருளானந்தபுரம் |
| 3 | தூத்துக்குடி மாவட்டம் | சேரகுளம்<br>பொத்தரக்கன் விளை<br>தெற்கு பரமன்குறிச்சி<br>பரமன்குறிச்சி<br>சிங்கராயர்புரம்<br>பெருமாள்புரம்<br>செந்தியம்பலம் (சாயர்புரம்)<br>அரசடி<br>பனையூர்<br>பாண்டியாபுரம்<br>வேப்பலோடை<br>சூரங்குடி<br>பாலையாபுரம்<br>சில்வர்புரம்<br>அண்ணாநகர், சுப்பிரமணியாபுரம் |
| 4 | இராமநாதபுரம் மாவட்டம் | செவல்பபட்டி |

**கிறிஸ்தவ மதம் மாறுதல்**

17ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மிஷன் மூலம் சாயர்புரத்தில் செந்தியம்பலத்தில் வாதிரியார் சமூகத்தினரை ஆங்கில அரசு குடியேறச் செய்து அவர்களுக்கான ஆலயம், வீடு, பள்ளிகள் அமைத்துக் கொடுத்தது. அதன் காரணமாக அப்பகுதி வாதிரியார் சமூகத்தினர் கிறிஸ்துவ மத மாற்றம் அடைந்தனர். அதன்பின் கல்வி அறிவு அடைந்தனர். ஆங்கிலேயரின் கல்விக் கூடங்களில் ஒன்றான சாயர்புரம் சாத்ராஜ் தெருவிலும் வாதிரியார் இனத்தவர் குடி அமர்ந்தனர்.

ஜி.யு. போப் ஐயர் அவர்களுக்கு வாதிரியார் சமூகத்தினரான தமிழ்ப் புலவர் நம்மையாழ்வார் வாதிரியார் தமிழ் கற்றுக்கொடுத்தார். இவர் கிறிஸ்தவ மத மாற்றம் அடைந்தவுடன் தன் பெயரை ஞானசிகாமணி என்று பெயரை மாற்றிக் கல்வித் தொண்டு செய்தார். இவர் இறந்தபின் இவருடைய சமாதியில் தலைப் பகுதியில் ஒரு பனை மரத்தையும் கால் பகுதியில் ஒரு பனை மரத்தையும் நட்டினர். அத்தகைய பகுதியை இன்று புனித இடமாக வழிபடுகின்றனர். வாதிரியார் சமூகத்தினர் கிறிஸ்தவ மதமாற்றம் அடைந்த பின்னரே இவர்கள் கல்வி கற்கவும் பள்ளி செல்லவும் வாய்ப்பு கிடைத்தது.

**பட்டியல் சாதியில் இணைத்தல்**

நெசவுத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்ந்த வாதிரியார் சமூகத்தினர் தங்கள் பொருளாதார கல்வி, அரசு உதவிகளை கவனத்தில்கொண்டு 1978ஆம் ஆண்டு பட்டியல் சாதி (SC & ST) அட்டவணையில் வாதிரியான் என்ற பெயரில் பதிவு செய்தனர்.

**வாதிரியார் மகாஜன சங்கம்**

வாதிரியார் தங்கள் கல்வி, பண்பாடு, தொழில் ஆகியவற்றில் கவனம் ஏற்படுத்தும் வகையில் தங்களை அடையாளப்படுத்துகின்ற வகையில் இச்சங்கம் 1970ஆம் வருடம்

(17.5.1970) அ. மரியமுத்து அவர்களால் தொடங்கப்பட்டது. இச்சங்கம் மூலம் வாதிரியார் சமூக வரலாறும் பழக்கவழக்கங்கள் என்ற தலைப்பில் ஆத்திமுத்து வாதிரியார், பி. பரமானந்தம் கனம் ஏசுவடியான் ஐயர் அவர்கள் மூலம் சிறிய புத்தகம் 1990இல் வெளியிடப்பட்டது.

### கோலிய பள்ளர்

பிற சமூகத்தினர் வாதிரியார் சமூகத்தைக் கோலிய பள்ளர் என்று அழைக்கின்றனர். நெய்வதற்குத் தேவையான நீண்ட கழியை வைத்துள்ளதால் இவர்களைக் கோலியர் என்று அழைத்தனர். பள்ளர் இனத்தில் வாதிரியார் சமூகத்தவரும் ஒரு பிரிவினர் என்று அவர்களில் சிலர் கூறுகின்றனர்.

### நெசவுத் தொழில்

வாதிரியார் சமூகத்தினர் நெசவுத் தொழிலை குலத்தொழிலாகச் செய்து வருகின்றனர். தொடக்காலத்தில் கம்பாயம் துணிகளை நெய்தனர். இத்துணிகளைத் தலை சுமையாக சுமந்து விற்று வந்தனர். தொடக்க காலத்தில் பெண்கள் ரவிக்கை போட மாட்டார்கள். கப்பாயம் துணி மட்டும் அணிவர்.

முன்னர் ஜனதா வகை சேலை நெய்தனர். இப்பொழுது அரசின் விற்பனைச் சேலைகளும், இலவச சேலைகளும் நெய்கின்றனர். தமிழகத்தில் ஆரம்ப காலத்தில் சாயர்புரம் சேலைக்கு அதிக மதிப்பு இருந்தது. இத்தகைய சேலையைப் பள்ளி கட்டுத்தறி சேலை என்று அழைப்பார்கள். இச்சேலை நெய்தபொழுது சாயர்புரத்தில் மட்டும் 1000 தறிகள் ஓடின என்கின்றனர். தற்பொழுது 200 தறிகள் மட்டுமே ஓடுகின்றன.

மிகக் குறைவான கூலியில் இத்தொழிலைப் பெண்களும், முதியவர்களும் இன்று குறைவான எண்ணிக்கையில் இப்பகுதியில் நெய்து வருகின்றனர். இவர்கள் இயந்திர உதவியில்லாமல் கையால் துணிகளை நெய்து வருவது குறிப்பிடத்தக்கது. வாதிரியார் இனத்தவர்கள் நெய்கின்ற சேலைகள் இரண்டு வகையான தறிகளில் நெய்யப்படுகின்றன.

(1) குழித் தறி (2) சப்பர தறி

### குழித் தறி

ஆரம்ப காலத்தில் இம்மக்கள் குடிசை வீடுகளில் வாழ்ந்தனர். இவர்களின் வீடுகள் குள்ளமாக இருந்தன. வீடுகளின் நடுவில் தறி நெய்வதற்கான இடத்தை ஒதுக்கி தாங்கள் நிற்கின்ற அளவுக்குக் குழி தோண்டி அதில் நின்று சேலை நெய்கின்றனர்.

### தறியிலிருக்கும் பொருட்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | விழுது | 2 | வட்டு | 3 | தறி அச்சு | 4 | ஓடம் |
| 5 | முன் அடுகம்பு | 6 | வட்டு ரோல் | 7 | மிதி பலகை | 8 | தார் |
| 9 | பரமரம் | 10 | சூலச்சம் | 11 | தட்டு | 12 | கண்டு<br>அடிக்கிற கண்டு |
| 13 | நின்னாடி | 14 | ராட்டு | 15 | விசை | 16 | கதிர் |

ஆரம்ப காலத்தில் நூல் சுற்றி எடுக்க செடியின் இலை, தண்டுகளை பயன்படுத்தினர். இத்தகைய தண்டுகளைப் பூச்சி அரிப்பது கிடையாது. இன்று பிளாஸ்டிக் மூலம் நூல் சுற்ற தண்டுகளைப் பயன்படுத்துகின்றனர். குழித் தறியில் அதிகமாகப் பெண்கள் நெய்கின்றனர்.

### மேசைத் தறி

மேசைத்தறி பிற்காலத்தில் மர வேலைகள் தொடங்கும்பொழுது வந்தது. மேசைத்

தறியில் இன்று விலைக்கு விற்கப்படும் சேலைகள் மட்டுமே நெய்கின்றனர். இதனை பேட்ரகம் என்பர். சிலர் சாரம், துண்டு நெய்கின்றனர். மேசை தறியில் டாவி என்பது சேலையின் ஓரங்களில் (டிசைன்) கொடுப்பது. இத்தகைய டிசைன்கள் ஒரு அட்டையில் வரையப்பட்டு அந்தப் படத்தில் நூல்கள் பின்னப்பட்டு பின் அதன் வடிவம் சேலையின் ஓரங்களில் நெய்யப்படுகின்றது. இன்று கூட்டுறவுத் துறையின் மூலம் இம்மக்களுக்கு மேசை தறி செய்து கொடுக்கப்பட்டு அதில் சேலை, சாரம் நெய்து வருகின்றனர்.

## நெய்கின்ற முறை

சேலை நெய்வதற்கு நூல்கள் ஆரம்ப காலத்தில் பருத்தி வாங்கி அதிலிருந்து நூல் நூற்று அதற்குப் பிறகு சேலை நெய்தனர். இன்று நூல்களை அவர்களுக்கான கூட்டுறவு சங்கத்தின் மூலம் நூல் வாங்குகின்றனர். ஆரம்ப காலத்தில் இவர்களின் குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒன்றுசேர்ந்து பாவு நெய்தனர். அப்பொழுது விடியக் காலை மூன்று மணிக்கு எழுந்து தெருவில் பாவு போடுவார்கள். அதற்கான ஆற்றுப்படுத்த வேண்டிய பாவுக்கு உரிமையாளர்

அதிகாலை எழுந்திருந்து தமது தெருவில் 100 மீட்டர் நீளமுள்ள பாவை ஆற்றும்பொருட்டு முதல் காலும், இளந்தலைக்காலும் பாவுக்கு முதலில் வருகின்ற முதல்காலிருந்து 10 மீட்டர் இடைவெளியில் தாங்கு குழி தோண்டி பின் பனை மட்டையில் செய்யப்பட்ட தாங்கி மட்டையை நட்டு இடை தாங்கி கம்பைப் போட்டுச் செய்கின்றனர்.

பாவுக்குத் தேவையான அரிசி மாவு / மைதா மாவு / கிழங்கு மாவு தயாரிக்கப்படுகிறது. பின் மாவு நீட்டப்படுகிறது. அப்போது புனி எனப்படும் பின்னல்களுக்கிடையே அலமக்கம்பு மற்றும் துவரி போடப்படுகிறது. ஒரு தட்டுக்கு இருவர் எனக் குடும்பத்திலுள்ள சிறியவர் முதல் பெரியவர் வரை ஒன்றுகூடி ஒரு நாளில் பணி முடிக்க உழைப்பார்கள். பசை ஏற்றப்பட்ட பாவில் காலதாமதம் செய்தால் முறுக்கவும் நூல் பாழாகிவிடும். எனவே, எப்பொழுதும் தட்டு வழியாக சூழ்ச்சத்தை அடைகிற கண்டுகளிலிருந்து வரும் நூல்கள் அறுந்து போகாமல் கவனித்து கொள்வர்.

பசை போடப்பட்ட நூல்கள் சூழ்ச்சத்தில் சுற்றுவதற்குத் தனியாக ஆட்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு ஒரு பாவுக்கு ரூபாய் 90 வரை கொடுக்க வேண்டும். அவர் சூழ்ச்சத்தில் வரும் நூலை 100 மீட்டர் வரை கிடைக்கும் நூலை சூழ்ச்சத்தியிலிருந்து எடுத்துக் கொடுப்பார். இத்தகைய நூல்கள் பெரிய ரோல்களில் சுற்றப்பட்டு நெய்யப்படுகின்றன. வலது, இடது என்று இரண்டு மிதிப் பலகை மூலம் இடை கண்டு நூல்கள் ஓடங்கள் மூலம் பின்னப்படுகின்றன. ஒவ்வொரு பின்னலுக்கும் மிதிப் பலகைகளில் கால்களை மாற்ற வேண்டும். அதைப்போல் கைகளாலும் ஓடங்கள் குறுக்குப் பகுதியில் நூல் கொண்டு பின்ன வேண்டும். இந்த ஓடங்கள் மூலம் சேலையின் ஓரங்களிலும், நடுப்பதியிலும் டிசைன் கொடுக்கப்படுகிறது. 100 மீட்டர் பாவுகளிலிருந்து 5 மீட்டர் சேலை என 20 சேலைகள் ஒரு பாவிலிருந்து கிடைக்கின்றன.

## கூலி

நெய்யப்பட்ட சேலை ஒன்றுக்கு ரூ.38.50 பைசா என்று சங்கம் நிர்ணயம் செய்த கூலி கொடுக்கப்படுகிறது. இதுதவிர இவர்களுக்கான சிக்கன நிதியும் பிடிக்கப்படுகிறது. இவ்வாறு இவர்களது மாத வருமானம் 1500 வரை கிடைக்கிறது. அரசுக்குக் கொடுக்கும் இலவச சேலை நெய்தல்தான் இவர்களுக்குப் பிரதான தொழில். மற்ற நெசவாளர்கள் போன்று இவர்கள் விற்பனைச் சேலைகளை நெய்யாமல் இன்றும் இலவச சேலைகளை மட்டும் அரசுக்கு நெய்து கொடுக்கின்றனர்.

**சங்க செயல்பாடு**

1953இல் இச்சங்கம் தொடங்கப்பட்டு வாதிரியார் சமூகத்திற்கு தேவையான நூலை வாங்கிக் கொடுத்து, நெய்யப்பட்ட சேலையிலிருந்து நூல் காசை கழித்துவிட்டு அவர்களுக்கான சிக்கன நிதிகள் மட்டும் கடன் தொகை வாங்கினால் அதற்கான பிடித்தம் செய்து கூலி கொடுக்கின்றனர். பேட் ரக சேலைகள் மட்டும் விற்பனைக்கு கூட்டுறவு துறைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. வாதிரியார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்று பதிவு செய்யப்பட்டு இன்றைய நிலையில் குறைவான எண்ணிக்கையில் நெசவு சேலைகள் நெய்யப்படுகின்றன.

**பிற சங்கங்கள்**

தமிழகத்தில் நெசவுத் தொழிலை குறிப்பிட்ட சமுதாய மக்கள் நெசவு செய்து வருகின்றனர். சாலியார், முதலியார், சௌராஷ்டியர், முஸ்லீம் என்று தமிழகத்தில் நெசவுத் தொழிலை குலத்தொழிலாகச் செய்து வருகின்றனர். வாதிரியார் இனத்தவர் வாழ்க்கைத் தரம் எளிமையான முறையில் ஆரம்பத்தில் நெய்த ஆடைகளை மட்டும் இன்றும் நெய்து வருகின்றனர். இன்றைய நவீன இயந்திரங்களுடன் பிற நெசவாளர்கள் புதிய வகையான பட்டு, சுங்கடி சேலை, வேட்டி, துண்டு, சாரம், சமுக்காளம் என்று நெய்கின்ற மற்ற நெசவாளர்களைவிட இவர்கள் இன்று எவ்வித இயந்திரம் இல்லாமல் கையால் நெசவு செய்து வருவகின்றனர்.

**தொழில் பார்வை**

நெசவுத் தொழில் செய்யும் மற்றவர்கள் வாதிரியார் சமூகத்தவரைத் தாழ்மையாகப் பார்க்கின்றனர். இவர்கள் நெய்கின்ற சேலைகளும் ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தும் சேலையாக இருப்பதால் அவர்களின் சேலைகளும் குறைவான மதிப்பீட்டில் மதிக்கப்படுகின்றன. இன்று ஒரு சிலர் மட்டும் அரசு நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். வாதிரியார் சமூகத்தினர் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வசிக்கின்றனர்.

தொடக்க காலத்திலிருந்து வாதிரியார் சமூகத்தினர் குழித் தறியில் சேலை நெய்து வருகின்றனர். பெண்கள் குனிந்து இத்தகைய தொழில் செய்கின்றவகையில் இவர்களின் நெஞ்சுகள் கூன் விழுந்து வயதான காலத்தில் குனிந்து நடக்கின்றநிலை ஏற்படுகிறது. தற்பொழுது மேசைத் தறியின் மூலம் இத்தகைய சங்கடம் இருப்பதில்லை என்று கூறுகின்றனர். இந்தக் காரணத்தால் கூட்டுறவு துறையின் மூலம் மேசைத் தறி அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

கூர்மையான பார்வை நெசவு தொழிலில் முக்கியம் மற்றும் பொறுமை மனதில் ஒரே சிந்தனை என்று நெசவுத் தொழில் செய்வதில் கவனம் செலுத்துகின்றனர். ஒரே இடத்திலிருந்து நெய்வதன் மூலம் காசம் போன்ற நோய்கள் வருகின்றன என்கின்றனர்.

**தொழிலின் மீது மதிப்பு**

பிற தொழிலைக் காட்டிலும் நெசவுத் தொழிலைப் புனிதமாக கருதுகின்றனர். இத்தொழிலில் உயிர்களுக்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. ஆகையால் வள்ளுவர் இத்தொழிலைச் செய்தார். வாதிரியார் சமூகத்தினர் இதுவரை அரசு கவனத்திற்கு எவ்விதக் கோரிக்கையும் கொண்டு சென்றில்லை. பிற தொழிலாளர்கள் போன்று இவர்கள் போராடுவது இல்லை. அரசு கவனத்திற்காகவே இவர்கள் இத்தொழில் செய்கின்றனர். வாரத்தில் இரண்டு சேலை வரை முழு வேலையாக செய்தால் நெசவுத் தொழிலுக்கு இரண்டு நபர்கள் தேவை. தறி நெய்வதற்கும் கண்டு சுற்றுவதற்கும் என்று இருவர் கவனமாகப் பாவு வேலை செய்வார்கள்.

ஊடு நூலைத் தார்களில் சுற்றுவதற்கு இராட்டினம் பயன்படுகிறது. தார்களில் சுற்றுவதற்குப் பயன்படும் நேரான கம்பிகளை

கதிர்கள் என கூறுகின்றனர். கண்டுத் தட்டு, கண்தட்டு, புளித் தட்டு என்ற தட்டுகள் கொண்ட சூழ்ச்சம் என்ற சூழல் மரத்தில் பாவோட்டப்படுகிறது. இன்று தெருக்களில் பாவோட்டம் செய்வது கிடையாது. நூல் வாங்கிப்பசைபோடும்நபர்களிடம்கொடுத்து விட்டால் அவர்கள் ஒவ்வொரு நூல் பண்டலுக்கும் இவ்வளவு பணம் என்று வாங்கி அரிசி / மைதா மாவு போட்டு பசை காய்ச்சி நூலைப் பசையில் வைத்துத் தெருக்களில் உலர வைக்கின்றனர். நூற்கட்டுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட குழி சிட்டமாக வகிர்ந்தெடுக்கப்பட்டுக் கண்டுகளில் இராட்டைகள் மூலம் சுற்றப்படுகிறது.

கண்டுகள் தொடக்கநிலையில் மூங்கில் குழல்களில் செய்யப்பட்டன. அரையடி அளவில் சீராக வெட்டப்பட்ட மூங்கில் குழல்கள் நெல் அவிக்கப் பயன்படும் பானைகளில் நெல் அவிக்கும்பொழுது நெல்லின் மீது கட்டுக்கட்டாக செங்குத்தாக நிறுத்தப்பட்டு வேக வைக்கப்படுகின்றன. வெந்த மூங்கில் குழல்கள் நிழலில் வைக்கப்பட்டு பின் கண்டு நூலில் சுற்றப் பயன்படுகின்றன. பாவின் நீள அகலத்திற்குத் தக்கவாறு சுற்றப்பட்ட கண்டுகள் தட்டு என்றழைக்கப்படும் பகுதியில் கம்பிகளில் அடைக்கப்பட்டு அதன் மெல்லிய நுனி இழைகள் தட்டு வழியாகக் கொடுக்கப்பட்டு புளித்தட்டில் பின்னால் ஏற்படுத்தும்வகையில் தயாரிக்கப்படுகின்றன. பெண்கள் வீட்டு வேலையுடன் இத்தொழிலையும் செய்வதால் வேலைப் பணி அதிகமாக நெசவுத் தொழிலில் இருப்பதைக் காண முடிகிறது. நவீன இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் கைகளால் இத்தொழில் செய்வதால் வேலைப்பாடு அதிக நாட்கள் வரை தேவைப்படுகிறது.

**பொருளாதாரம்**

நெசவுத் தொழில் செய்யும் இம்மக்கள் இத்தொழிலில் குறைவான வருமானம் கிடைக்கிறது. நேரம், காலம் அதிகம் உழைத்தும் குறைவான கூலி கிடைப்பதால் இத்தொழில் இன்று குறைவான எண்ணிக்கையில் வாதிரியார் சமூகத்தினர் ஈடுபடுகின்றனர். தற்பொழுது நெசவுத் தொழிலைவிட்டு கூலி வேலைக்குச்செல்கின்றனர். நெசவுத் தொழிலில் வரும் வருமானத்தைக் காட்டிலும், பிற தொழிலில் இதைவிட வருமானம் கிடைப்பதால் பிற வேலைக்கு செல்கின்றனர். நெசவுத் தொழிலில் உள்ள வருமானத்தில் குழந்தைகள் கல்விச் செலவுக்குக்கூட செய்ய முடியாதநிலையில் இருப்பதைக் காண முடிகிறது. வாதிரியார் சமூகத்தில் 75% கிறிஸ்தவ மதத்திற்கு மாறிவிட்டதால் அரசு உதவியும் இவர்களுக்குக் கிடைப்பது அரிதாக உள்ளது. வாதிரியார் சமூகத்தினர் தங்கள் குலத் தொழிலைவிட்டுப் பிற தொழில் செய்ய விரும்புகின்றனர். அரசும் நெசவாளர்நெய்கின்றதுணிகளைவிற்பனை செய்வதில் காலதாமதம் அடைந்து துணிகள் தேக்க நிலையிலிருப்பதைக் அறிய முடிகிறது.

**வழிபாட்டு முறை**

வாதிரியார் சமூகத்தின் குலதெய்வமாகச் செட்டியாபத்து ஐந்து வீட்டு சுவாமி கோயிலை வழிபடுகின்றனர். இத்தகைய கோயில் வாதிரியார் இனத்தவரின் பெரியவர்கள் வாழ்ந்த முதல் இடமாகவும், அம்மக்களின் மருத்துவத் தொழிலும், மந்திரம் கற்றுக்கொள்ளும் இடமாக இருந்தது. தற்பொழுது இப்பகுதியில் நாடார் சமூகத்தினர் குடி அமர்ந்ததால் அவர்களின் நிர்வாகத்தில் ஐந்து வீட்டுச் சுவாமி கோயில் இருக்கிறது. வாதிரியார் சமூகம் இருக்கும் இடங்களில் ஐந்து வீட்டுச் சுவாமி கோயில் அமைத்துக் குருபூசை கொடுத்து வழிபடுகின்றனர்.

வாதிரியார் சமூகம் வழிபடும் பெருமாள் வழிபாடு சிறப்பாகப் புரட்டாசி மாதம் கூழ் காட்சி வழிபடும் விழா, சிறப்பாக

நடைபெறுகிறது. வயணம் பெருமாளைத் தங்கள் சமூகத்தின் குலதெய்வமாக வழிபடுகின்றனர். வழிபாட்டில் அசைவ உணவு படைத்து வழிபாடு செய்கின்றனர். இவர்கள் வழிபடும் செட்டியாபத்து ஐந்து வீட்டு சுவாமியான, வயணபெருமாள், ஆத்தியப்பன், வயணபிராட்டி போன்ற தெய்வங்களுக்குப் பூசை நேரத்தில் கீழ்க்கண்ட மாற்றுப் பெயர்களை பயன்படுத்த வேண்டும் என்பது இத்தெய்வ வழிபாட்டு முறையாகும்.

| பொருள் | மாற்றுப்பெயர் |
|---|---|
| ஆடு | நடையான் |
| பன்றி | ஆத்தி (கட்டைக்காலன்) |
| சேவல் | கீரிக்குட்டி |
| பனை | பாண்டம் |
| சோறு | அன்னமுந்திரி |
| அகப்பை | கணக்குபிள்ளை |
| மாமிசம் | தோசம் |
| எலும்பு | கரன் |
| தோல் | சட்டை |
| முட்டை | அண்டம் |
| மீன் | மச்சம் |
| சாராயம் | தீர்த்தம் |
| திருவிழா | பூஜைக் கூட்டம் |
| பூசாரி | பணிவிடை |

வாதிரியார் சமூகத்தில் மட்டுமே இத்தகைய வழிபாட்டுமுறை இருப்பதைக் காண முடிகிறது. தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்தாலும் ஒவ்வொரு சமூகத்தின் பண்பாடுகளைப் பதிவு செய்வது முக்கியமானதாக. பிற்கால ஆய்வுகளுக்குப் உதவ வழிவகை செய்யும். வாதிரியார்களைப் பற்றிய அவை குறைவான எண்ணிக்கையில் அவர்களின் தொழில்முறைகளை மட்டுமே ஆய்வு செய்துள்ளனர். அவர்களின் இன வாழ்க்கையை முழுமையாக ஆய்வு செய்யாத நிலையில் களப்பணி மேற்கொண்டு தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தகவாளர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| பரதேசி | வயது 56 | படிப்பு 5 | இனம் : வாதிரியார் | தொழில்: நெசவு |
| ஐ. தனசேகரன் | வயது 56 | படிப்பு 5 | இனம் : வாதிரியார் | தொழில்: நெசவு |
| சி. காந்திமதி | வயது 56 | படிப்பு 5 | இனம் : வாதிரியார் | தொழில்: நெசவு |
| ச.கருத்தகண்ணு (வாதிரியார் சங்கத்தலைவர்) | வயது 56 | படிப்பு 5 | இனம் : வாதிரியார் | தொழில்: நெசவு |

**துணை நூல்கள்**

1. வால்வாதிரியார், J.P. 1990. வாதிரியார் சமூக வரலாறு, பழக்க வழக்கங்கள், வாதிரியார் மகாஜன சங்கம், சென்னை.
2. த. செயகுமார், 1999. நூலும் வாழ்வும், வாதிரியார் சமூக வாழ்வியல் - ஓர் ஆய்வு - நெய்தல் வெளியீடு, சென்னை.
3. குருசாமி சித்தர், தே. ஞானசேகரன், 1996. தமிழர் பண்பாட்டு வரலாறு, தமிழர் பண்பாட்டு சமூக ஆய்வு மன்றம், கோவை.
4. குருசாமி சித்தர், தே. ஞானசேரன் 1999. தமிழர் பண்பாடு வரலாறு (தொகுப்பு-II) தமிழர் பாண்பாட்டு சமூக ஆய்வு மையம், கோவை.
5. ச. தட்சிணாமூர்த்தி, 1994. தமிழர் நாகரிகமும், பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை.

6. இராம. சுந்தரம், ரா. கிருட்டிணமூர்த்தி, 1998. காலந்தோறும் அறிவியல் தொழில்நுட்பம், அனைத்திந்திய அறிவியல் தமிழ் கழகம், தஞ்சாவூர்.
7. சு. சண்முகசுந்தரம், 2006. தன்னனானே நெல்லை நாட்டுப்புறவியல் காவியா பெங்களுர்.
8. நா. வானமமாலை, 1995. நாவின் ஆராய்ச்சி, மக்கள் அச்சகம், சென்னை.
9. சியாமளா சரண்தாயே, 1996. இந்திய சமுதாயம், நேசனல் புக் டிரஸ்ட், இந்தியா.
10. கதிர் முருகு, 2007. முக்கூடற்பள்ளு, மூலமும் உரையும், சாரா பதிப்பகம், சென்னை.
11. பி.சுப்பிரமணியம், 1996. தமிழர்களின் சமூக வரலாறு (1707-1947), டாக்டர் பிரிண்ட் வேர்ல்ட் (பி), புது தில்லி.
12. ஏ.கே. தாஸ், 1979. பழங்குடி கலை மற்றும் கைவினை அகம் கலா பிரகாம், டெல்லி.
13. ரிச்சர்ட் - ஆண்ட்ரசன் 1979 ஆர்ட் இன் ப்ரிமிட்டி சமூகங்கள் பெக்கன்டைல் ஹால் - ஈனே, எங்கிள் - உலக கிளிஃப்ட்ஸ்.
14. சுர்ணிலா சானி, 1997. ராஜஸ்தானின் டெர்ரகோட்டா ஆர்ட், ஆர்யம் புக்ஸ் இன்டர்நேஷனல் புது தில்லி.



நூல் சிக்கல் எடுக்கும் சட்டம்
(இடம் : பரமன்குறிச்சி)





குழித் தறியில் நெய்யப்படும் பள்ளுக்கட்டு தறிச் சேலை, அ. லெட்சுமணன்
(இடம் : சாயர்புரம்)

